ஈரோடு மாவட்டம் பருவாச்சி ஊராட்சி பவானி வட்டாரம்

தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) பவானி அவர்களின் செயல்முறைகள் ஆணைகள்

பிறப்பிப்பவர் : திரு.C.கிருஷ்ணமூர்த்தி

ந.க.எண்.2/2026 நாள் : 27.02.2026

பொருள் :

மனைப்பிரிவு ஒப்புதல், ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், பருவாச்சி ஊராட்சி/கிராமம், ரீ.ச.எண்.141/3A அமையும் 2.07 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி அளித்து - ஆணை வழங்கி உத்திரவிடல் - தொடர்பாக :-

பார்வை :

1. விண்ணப்பதாரர்கள் திருமதி.எஸ்.சரோஜா மற்றும் ஒன்பது பேர் ஆன்லைன் விண்ணப்ப எண்.UKFIKQZX, தேதி:08/07/2023

2. ஈரோடு மாவட்ட நகர மற்றும் கிராம திட்டமிடல் அலுவலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட சாலை வடிவமைப்பு திட்டம் தேதி 21.07.20223

3. ஈரோடு மாவட்ட வேளாண்மைத் துறை இணை இயக்குநரின் கடிதம் எண் A4/5547/2023(10) தேதி:27.06.2023

4. கடிதம் பதிவு எண்.19799/2020, தேதி:24.12.2020, சென்னை நகர மற்றும் கிராம திட்டமிடல் இயக்குநர் (சுற்றறிக்கை)

5. விண்ணப்பதாரர்கள் திருமதி.எஸ்.சரோஜா மற்றும் ஒன்பது பேர் பதிவேற்றிய பரிசுப் பத்திரம் தேதி 31.08.2023

(பரிசுப் பத்திர ஆவண எண் உள்ளாட்சி அமைப்பு 3627/2023 தேதி 28.08.2023, TANGEDCO 3626/2023 தேதி : 28.08.2023)

6. அரசாணை 138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை, தேதி:04.06.2004

7. அரசாணை 79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை, தேதி:04.05.2017

8. G.O.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் நீர் வழங்கல் துறை, தேதி:04.02.2019 மற்றும் G.O.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் நீர் வழங்கல் துறை, தேதி 31.01.2020 மற்றும் G.O.181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை, தேதி:09.12.2020

9. G.O.141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை, தேதி:23.09.2020

10. G.O.141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை, தேதி:16.07.2022

11. அரசு கடிதம் எண்.19113/நவம்பர் 4(3)/ 2017-1, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை, தேதி:30.08.2017.

12. சென்னை நகர மற்றும் கிராம திட்டமிடல் ஆணையரின் கடிதம் எண் 13686/2017/LA1, தேதி:08.09.2017 (சுற்றறிக்கை).

13. சென்னை நகர மற்றும் கிராம திட்டமிடல் இயக்குநரின் கடிதம் எண்.320/2022/TCP3 தேதி:07:01 2022 (சுற்றறிக்கை)

14. கட்டணம் செலுத்தக் கோரும் கோரிக்கைக் கடிதம், தேதி:21.07.2023 மற்றும் 01.09.2023

(OSR வழிகாட்டுதல் வரி மதிப்பு கட்டணம் சென்டேஜ் கட்டணம், காட்சி பலகை கட்டணம் மற்றும் கொடி நாள் நிதி செலுத்த வேண்டும்).

15. விண்ணப்பதாரர்கள் திருமதி எஸ்.சரோஜா மற்றும் ஒன்பது பேர் கடிதம் தேதி:31.08.2023 மற்றும் 01.09.2023 (சென்டேஜ் கட்டணம் செலுத்துதல், காட்சி பலகை கட்டணம், OSR வழிகாட்டுதல் வரி மதிப்பு கட்டணம், கொடி நாள் நிதி)

16. சென்னை நகர மற்றும் கிராம திட்டமிடல் இயக்குநரின் கடிதம் (சுற்றறிக்கை) எண்.4367/2019/TCP2. தேதி:14.08.2021

17. இவ்வலுவலக ந.க.எண்:2/2026 நாள்:23.02.2026

ஆணை :

பார்வை 2,3,4-ல் காணும் கடிதத்தில், ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், பவானி ஊராட்சி ஒன்றியம், பருவாச்சி கிராமம், ஊரட்சி ச.எண்.141/3A அமையும் 2.07 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./ம(சே) எண்.27/2019, என எண்ணிடப்பட்டு 2 அசல் வரைபடங்கள் மேல்நடவடிக்கைக்காக நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலவலகம் ஈரோடு அளிக்கப்பட்டு மேல்நடவடிக்கை மேற்கொள்ளத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனைப்பிரிவில் மனைப்பிரிவு உரிமையாளர் திருமதி.எஸ். சரோஜா மற்றும் ஒன்பது நபர்கள் 5/7, எருகாட்டு வலசு, பெரிய விளமலை, முள்ளம்பட்டி, பெருந்துறை வட்டம், ஈரோடு மாவட்டம் - 638 107. இவருக்கு ஈரோடு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற மனைப்பிரிவுகளுக்கான வரைபடம் முழுமையாக பரிசீலிக்கப்பட்டு, வீட்டு மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் குறித்து பிரஸ்தாப இடத்தினை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) உதவி பொறியாளர் நேரில் ஆய்வு செய்ததில் வரைபடத்தில் குறிப்பிட்டவாறு சாலைகள் மற்றும் பூங்கா பவானி சார்பதிவாளர் அலவலக தான ஆவண எண்.3627/2023 நாள்:28/08/2023 ன் படியும் பதிவு செய்து பருவாச்சி ஊராட்சிக்குத் தானமாக வழங்கப்பட்டுள்ளது.

மனைப்பிரிவில் மொத்தம் கோரிய மனைகள் 38 மனைகள், ஒதுக்கிய மனைகள் 36 (EWS) மனைகள் உள்பட 38 மனைகளின் மொத்த பரப்பு பார்வை 1-ல் காணும் அரசாணையின்படியும் பார்வை 3-ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு மண்டலம், ஈரோடு அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும் மனைப்பிரிவிற்கு 3%

Market Value கட்டணம் ரூ.30,000/- (ரூபாய். முப்பதாயிரம் மட்டும்) E:-/all panchayat lay out/ layout proceding new model

0217 Urban Development

80 Other Urban Development Schemes

800 Other receipts

AS-Receipts under land se conversion charges

27-Non Taxation fees

09-Colections

(DPC : 02171-60-800-45-2790)

என்ற தலைப்பில் பவானி பாரத மாநில வங்கியில் செலுத்தப்பட்டு ஒரு செலுத்து சீட்டு எண்-2026022795973 (நாள்:27.02.2026) நிலத்தின் உரிமையாளர் ஒப்படைத்துள்ளார்.

எனவே பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், பவானி ஊராட்சி ஒன்றியம், பருவாச்சி ஊராட்சி ச.எண்.141/3A அமைபும் 2.07 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள குடியிருப்பு வீட்டு மனையிடங்களுக்கு அமைந்துள்ள 38 இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

நிபந்தணைகள்

1. ஈரோடு மண்டலம் நகர் ஊரமைப்பு துணை இயக்குநபர் அவர்களின் SWP/DTCP/Erode அங்கீகார எண்.368/2023 நிபந்தனைகளையும் தவறாது கடைப்பிடிக்க வேண்டும்

2 மனைப்பிரிவு வரைபடத்தில் பிரிக்கப்பட்டுள்ள மனை நில அளவுகளின் விபரங்களை இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றி அமைத்தல் கூடாது

3. வரன்முறை செய்து· வழங்கப்படும் மனைப்பிரிவுகளில் வீடுகள் மட்டும் கட்டுவதற்கு பயன்படுத்த வேண்டும் அபாயகரமானதும் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழிற்சாலைகள் ஏதும் ஏற்படுத்திட அனுமதி இல்லை.

4. மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதேனுமிருந்து கட்டணம் செலுத்த வேண்டி இருப்பின் அதனை மனுதாரர் செலுத்த வேண்டும்

5. ஒவ்வொரு மனைப்பிரிவு பத்திர பதிவிற்கும் மனைப்பிரிவு அங்கீகார வரைபட நகலினை இணைத்து பத்திர பதிவு செய்திடல் வேண்டும்

6. அரசின் கொள்கை அளவிலான மனைப்பிரிவு அங்கீகாரத்தில் அரசு மாற்றங்கள் ஏதேனும் செய்து உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டால் அந்த உத்தரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவராவார்

7. பத்திர பதிவுகள் மற்றும் நில உடைமை மாற்றங்களில் ஏற்படுத்தப்படும் சிவில் வழக்குகளுக்கு மனுதாரரே முழுப் பொறுப்பாவார்.

8. ஸ்ரீ கணபதி நகர் ரீ.ச.எண்.141/3A-ல் 1 முதல் 38 சைட்களும் பருவாச்சி ஊராட்சி தீர்மான எண்.9/2026-ன் படி அங்கீகரிக்கப்படுகிறது.

தனி அலுவலர்,
பருவாச்சி ஊராட்சி.
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.உ),
பவானி வட்டாரம்.

27.2.2026

பெறுதல்

1. திருமதி.எஸ்.சரோஜா மற்றும் ஒன்பது பேர்,
   5/7, எருகாட்டு வலசு, பெரியவிளமலை,
   முள்ளம்பட்டி, பெருந்துறை,
   ஈரோடு – 638 107.

2. தாசில்தார்,
   பவானி தாலுகா,
   ஈரோடு மாவட்டம்.

3. உதவி இயக்குநர்,
நில அளவை மற்றும் நில பதிவேடுகள் துறை,
கலெக்டரேட் அலுவலகம், ஈரோடு.

4. மேற்பார்வை பொறியாளர்,
மின்சார விநியோக வட்டம்,
தமிழ்நாடு உற்பத்தி மற்றும் விநியோகக் கழகம் லிமிடெட்,
ஈரோடு/கோபிச்செட்டிபாளையம்,
ஈரோடு மாவட்டம்.

5. தலைவர்,
தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம்,
எண்.1A, சிஎம்டிஏ II 1 வது தளம்,
காந்தி இர்வின் பாலம் சாலை, எழும்பூர்,
சென்னை - 600 008